පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்

UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

**පළමු වසර ශාස්ත්‍රවේදී උපාධි පරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය)**
**අගෝස්තු 2017**
**(முதலாம் வருட கலைத்தேர்வு பரீட்சை ( வெளிவாரி - புதிய பாடத்திட்டம்)**
**ஆகஸ்ட் 2017**

1st YEAR (100 LEVAL) EXAMINATION IN BACHELOR OF ARTS
(EXTERNAL - NEW SYLLABUS) AUGUST 2017

# SUPE 005

# Basic Tamil

(இவ்வினாத்தாளில் எட்டு வினாக்கள் உள்ளன.
எல்லா வினாக்களுக்கும் விடை தருக. )

நேரம்: மூன்று மணித்தியாலம்

---

**01. பின்வரும் உரையாடலை பொருத்தமான முறையில் பூர்த்தி செய்க.**
**දී ඇති සංවාදයේ හිස්තැන් සම්පූර්ණ කරන්නග**

கீதா - எப்படிச் சுகம் கமலா?

கமலா - ...............................................................

கீதா - அம்மா அப்பா எல்லாரும் எப்படி?

கமலா - ...............................................................

கீதா – புது வேலை எப்படி? விருப்பமா?

கமலா - ...............................................................

கீதா – எப்போ ஊருக்கு வந்தீர்கள்?

கமலா - ...............................................................

கீதா - மீண்டும் எப்போ சந்திப்பம்?

கமலா - ...............................................................

(புள்ளிகள் 10)

02. **பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி பிழையற்ற வாக்கியங்கள் ஆக்குக.**
**පහත සඳහන් වචන ගෙන වාක්‍ය තනන්න**

01. குடி ...........................................................................

02. இரு ...........................................................................

03. வாசி ...........................................................................

04. சிரி ...........................................................................

05. சாப்பாடு ...........................................................................

06. பந்து ...........................................................................

07. பாடசாலை ...........................................................................

08. இரவு உணவு ...........................................................................

09. குடும்பம் ...........................................................................

10. நண்பன் ...........................................................................

(புள்ளிகள் 20)

03. **சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியங்களாக அமைத்து எழுதுக.**

**වචන ගලපා නිවැරදි වාක්‍ය තනන්න**

1. மாவட்டங்களும் / ஒன்பது / உள்ளன / இருபத்து ஐந்து / இலங்கையில் / மாகாணங்களும்

   ...........................................................................................

2. ஹக்கல / பேராதனையில் / அமைந்துள்ளன / பூந்தோட்டமும் / நுவர எலியவில் / பூந்தோட்டமும் / பேராதனை

   ...........................................................................................

3. மக்கள் / தைப்பொங்கலையும் / ஒவ்வொரு / கொண்டாடுகிறார்கள் / தீபாவளியையும் / தமிழ் / வருடமும்

   ...........................................................................................

4. பயனுள்ள / சேகரித்தல் / ஆகியன / பூந்தோட்டம் / முத்திரை / பொழுதுபோக்குகள் / அமைத்தல் / ஆகும்

.....................................................................................................

5. ஆங்கிலம் / படிக்க / மூன்று / தமிழ் / மக்கள் / சிங்களம் / மொழிகளையும் /எல்லோரும் / ஆகிய / வேண்டும் / இலங்கை

.....................................................................................................

(புள்ளிகள் 10)

**04. பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக**
**පහත සඳහන් වාක්‍ය ප්‍රශ්නාර්ථ වාක්‍ය වලට හරවන්න**

1. இவர் எனது நண்பர்.
.....................................................................................................

2. நாங்கள் பல்கலைக்கழக மாணவர்கள்.
.....................................................................................................

3. இது அவரது வீட்டு முகவரி.
.....................................................................................................

4. தங்கை இன்று பாடசாலை செல்ல மாட்டாள்.
.....................................................................................................

5. நான் இப்பொழுது பேராதனையில் இருக்கிறேன்.
.....................................................................................................

(புள்ளிகள் 05)

05. **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**පහත සඳහන් ජේදය කියවා අසා ඇති ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න**

நான் சுனில். எனது ஊர் வென்னப்புவ. எனது வயது பதினெட்டு. எனது அம்மாவின் பெயர் பத்மினி. அம்மா வீட்டில் இருக்கிறார். அப்பாவின் பெயர் சோமபால. அவர் இலங்கை வங்கியில் வேலை செய்கிறார். எனக்கு ஒரு அண்ணாவும் இரண்டு தங்கைமாரும் இருக்கிறார்கள். எனது அண்ணா பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தில் படிக்கிறார். எனது தங்கை நான்காம் வகுப்பில் படிக்கிறாள். எனது தங்கையின் பெயர் நந்தனா. அவளுக்கு தமிழ் படிக்க மிகவும் விருப்பம். தினமும் அவள் தமிழ் வகுப்புக்குப் போகிறாள். நான் வென்னப்புவ மகா வித்தியாலயத்தில் உயர் வகுப்பில் படிக்கிறேன். எனது விருப்பமான பாடம் சிங்களம். எனக்கு கிரிக்கட் விளையாட மிகவும் விருப்பம். எனது விருப்பமான கிரிக்கட் வீரர் மாலிங்க. எனக்கு ஒரு நல்ல நண்பர் இருக்கிறார். அவரது பெயர் ஜகத். ஜகத்தின் அம்மா ஒரு வைத்தியர். அவரது அப்பாவும் ஒரு வைத்தியர். ஜகத்துக்கு சகோதர சகோதரிகள் இல்லை. ஜகத் நன்றாக சித்திரம் வரைவார். நான் நிறைய கதைப் புத்தகங்கள் வாசிப்பேன். எனது விருப்பமான புத்தகம் "மடொல் தூவ". எனக்கு ஒரு அழகான செல்லப்பிராணி இருக்கிறது. அது ஒரு நாய். எனது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பன்சலையும் ஒரு இந்துக் கோயிலும் இருக்கின்றன. நான் 'போய' நாட்களில் அம்மாவுடன் பன்சலைக்குப் போவேன். எங்களுடன் எனது தங்கையும் பன்சலைக்கு வருவாள். அந்தப் பன்சலையில் ஒரு பெரிய புத்தர் சிலை இருக்கிறது. பன்சலையில் நிறைய பூ மரங்களும் இருக்கின்றன.

(அ)

1. சுனிலுக்கு எத்தனை வயது?
2. சுனிலின் விருப்பமான கிரிக்கட் வீரர் யார்?
3. சுனிலுக்கு எத்தனை சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள்?
4. சுனிலின் அப்பா எங்கு வேலை செய்கிறார்?
5. ஜகத்தின் அம்மா என்ன செய்கிறார்?
6. 'போய' நாட்களில் சுனில் என்ன செய்வான்?
7. சுனிலின் செல்லப்பிராணி எது?
8. சுனிலுக்கு விருப்பமான புத்தகம் எது?
9. சுனிலின் பாடசாலையின் பெயர் என்ன?
10. சுனிலுடன் பன்சலை செல்பவரகள் யாவர்?

(புள்ளிகள் 10)

மேலே தரப்பட்டுள்ள பந்தியிலிருந்து 5 வினைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

(புள்ளிகள் 05)

06. **கீழே உள்ள படத்தை அவதானித்து, இது குறித்து 5 வாக்கியங்கள் தமிழில் எழுதுக.**
**පහත සඳහන් පිංතූරය බලා වාක්‍ය 05 ක් ලියන්න**

(புள்ளிகள் 10)



www.alamy.com - FK12RF

07. **பின்வரும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் 10 வாக்கியங்கள் அமையும் உரையாடலை எழுதுக.**
**දී ඇති අවස්ථාවට අනුව කෙටි සංවාදය ගොඩනගන්නග**

உமது மாமா கண்டியில் உள்ள ஒரு வங்கியில் வேலை செய்கின்றார். அவர் தனது குடும்பத்துடன் கண்டியில் இருக்கின்றார். விடுமுறையின்போது நீங்கள் மாமாவைப் பார்க்க கொழும்பில் இருந்து புகைவண்டியில் கண்டிக்குப் போகிறீர்கள். கண்டிப் புகையிரத நிலையத்தில் மாமா உங்களுக்காகக் காத்து இருக்கிறார். மாமாவைக் கண்டதும் அவருடன் நீங்கள் கலந்துரையாடும் 10 வாக்கியங்களை எழுதுக.

(புள்ளிகள் 20)

08. பின்வருவனவற்றை சிங்களத்திற்கு மொழிபெயர்க்கவும்
**සිංහලට පරිවර්තනය කරන්න**

1. வீதிக் குறியீடுகளைப் பின்பற்றவும்
2. மதுபானம் அருந்துதல், புகைப்பிடித்தல் ஆகியன புற்றுநோயை ஏற்படுத்தும்.
3. பொதுச் சொத்துகளைப் பாதுகாப்போம்.
4. பொது இடங்களில் ஒழுக்கம் பேணுவோம்.
5. டெங்கு நுளம்புகளை ஒழிப்போம்.
6. குப்பைகளைத் குப்பைத் தொட்டிகளில் போடவும்
7. மிக விரைவில் அத்தியாவசியமான பொருட்களின் விலை குறையவுள்ளது.
8. இன்று பல்கலைக் கழகம் விடுமுறை.
9. எனது ஊர் யாழ்ப்பாணம்.
10. எமது நாட்டின் சுதந்திர தினம் பெப்ரவரி நான்கு ஆகும்.

(புள்ளிகள் 10)